# ரோல்ஸ் ராய்ஸ் | ஊடகத் தகவல்

## மாறுபட்ட புதிய தோற்றத்தில்
## ரோல்ஸ் ராய்ஸ் பாண்டம்

13 மே 2022

- புதிய மாறுபட்ட தோற்றத்தில் வெளிவரும் பாண்டம் சீரிஸ் II – ரோல்ஸ் ராய்ஸ் அறிவிப்பு
- எட்டாவது தலைமுறை பாண்டம் கார் வாடிக்கையாளர்களின் கோரிக்கை மற்றும் விருப்பத்துக்கு ஏற்ப 'லைட்-டச்' காட்சியும் அழகிய வேலைப்பாடுகளும் வடிவமைக்கப்பட்டுள்ளது
- ரரோல்ஸ்-ரோய்சின் போண்டம் காரில் புதிய இணைப்பு வசதி மற்றும் ‘விஸ்பர்ஸ்’ செயலி பொருத்தப்பட்டுள்ளது.
- இந்த கார் அறிமுகத்தின்போது புதிய தனித்துவமிக்க தலைசிறந்த பாண்டம் பிளாட்டினோ பற்றி கூறப்பட்டது

“ஆடம்பர உலகின் உச்சத்தில் பாண்டம் நிகரற்ற இடத்தைப் பிடித்துள்ளது. இந்த கார் எங்கள் நிறுவனத்தின் வடிவமைப்பு, தொழில்நுட்பம் மற்றும் கைவினைத்திறன் ஆகியவற்றின் சிறந்த பிரதிபலிப்பாக திகழ்கிறது. இது கண்ணோட்டம், படைப்பாற்றல், சிறந்த பொருட்கள், திறமை, பொறுமை மற்றும் துல்லியம் ஆகியவற்றைக் கொண்டு சரியாக தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் எங்களின் பாண்டம் சீரிஸ் II காரில், இந்த அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் ஆடம்பரமான பொருட்கள் பயன்பாட்டுடன் மாறி வரும் வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் விருப்பத்திற்கு ஏற்ப பலதரப்பட்ட அர்த்தமுள்ள மேம்பாடுகளைச் செய்துள்ளோம். உலக அளவில் பாண்டம் கார் எப்போதுமே சிறந்த காராக பார்க்கப்பட்டு வருகிறது. எங்களின் தனித்துவமிக்க திறமைகள் காரணமாக இந்த கார் எங்கள் வாடிக்கையாளர்களுக்கும், அவர்களின் உலகத்திற்கும் சிறந்த காராக



The Drive, Westhampnett, Chichester, PO18 0SH, UK +44 (0)1243 384000 enquiries@rolls-roycemotorcars.com www.rolls-roycemotorcars.com

Rolls-Royce Motor Cars Limited. Registered in England and Wales. Company number 3522604. Registered address: Summit ONE, Summit Avenue, Farnborough, Hampshire, GU14 0FB.
Rolls-Royce Motor Cars Ltd is authorised and regulated by the Financial Conduct Authority in relation to its credit broking activities in the UK

இருக்கும். மேலும் எங்கள் தயாரிப்புகள் நீண்ட காலம் நிலைத்து இருப்பதோடு, அழகு, ஆடம்பரம் மற்றும் தொழில்நுட்பம், நேர்த்தியான வடிவமைப்பு ஆகியவற்றின் ஒட்டுமொத்த வெளிப்பாடாக திகழ்கின்றன. இந்த விஷயத்தில் போண்டம் ஒரு தனித்துவமான மற்றும் சிறந்த இடத்தைப் பிடித்துள்ளது. இந்த கார் காலத்தால் அழியாத அதன் நேர்த்திக்காக தனித்துவமிக்கதாக திகழ்கிறது என்று ரோல்ஸ் ராய்ஸ் மோட்டார் கார்ஸ் நிறுவன தலைமை செயல் அதிகாரி டார்ஸ்டன் முல்லர்-ஓட்வோஸ் தெரிவித்தார்.

எட்டாவது தலைமுறை பாண்டம் கார் 2017-ல் வெளிவந்தது. வாடிக்கையாளர்களின் வழிகாட்டுதல்களின்படி அவர்கள் விரும்பும் வண்ணம் புதிய காரை உருவாக்குவதிலும், வடிவமைப்பதிலும் அதன் வடிவமைப்பாளர்கள் மற்றும் என்ஜினியர்கள் செயலாற்றுகின்றனர். இந்த காரைப் பொறுத்தவரை இது மிகவும் புகழ்பெற்ற காராக இருப்பதால் அதில் எந்தவித மாற்றமும் செய்ய வேண்டாம் என்று அவர்கள் கேட்டுக் கொண்டனர். வாடிக்கையாளர்கள் கோரிக்கைக்கு ஏற்ப, சிறிய அளவிலான மாற்றங்கள் மட்டுமே இதில் செய்யப்பட்டுள்ளன. உண்மையில், இது எதை மாற்ற வேண்டும் என்பது பற்றியது அல்ல, ஆனால் உண்மையில், எதைப் பராமரிக்க வேண்டும் மற்றும் பாதுகாக்க வேண்டும் என்பதைப் பற்றியதாகும்.

**புதிய வெளிப்பாடு**

இந்த காரின் கம்பீரமான வெளிப்புறத் தோற்றத்தில் எந்தவிதமான மாறுதலும் இல்லாமல் அப்படியே இருக்கிறது. இருப்பினும் இதன் முன்புற கிரில் மேலே உள்ள பகல்நேர விளக்குகளுக்கு இடையே ஒரு புதிய மெருகூட்டப்பட்ட கிடைமட்ட கோடு வரையப்பட்டதன் மூலம் இது மேலும் மெருகூட்டப்பட்டுள்ளது. இது இந்த காருக்கு ஒரு புதிய மற்றும் உறுதியான தன்மையை அளிக்கிறது. மேலும் இதன் முன்புறத்தில் உள்ள பாந்தியன் கிரில்லில் ஒரு நுட்பமான வடிவியல் மாற்றம் காரணமாக இதன் 'ஆர்ஆர்' சின்னம் மற்றும் ஸ்பிரிட் ஆப் எக்ஸ்டஸி சின்னம் ஆகியவற்றை



The Drive, Westhampnett, Chichester, PO18 0SH, UK +44 (0)1243 384000 enquiries@rolls-roycemotorcars.com www.rolls-roycemotorcars.com

Rolls-Royce Motor Cars Limited. Registered in England and Wales. Company number 3522604. Registered address: Summit ONE, Summit Avenue, Farnborough, Hampshire, GU14 0FB.
Rolls-Royce Motor Cars Ltd is authorised and regulated by the Financial Conduct Authority in relation to its credit broking activities in the UK

முன்பக்கத்தில் இருந்து பார்க்கும்போது அவை இந்த காரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆக்குகின்றன. இதில் பொருத்தப்பட்டுள்ள கிரில் ஒளிரும் தன்மையை கொண்டதாகும். இந்த அம்சம் புதிய கோஸ்டில் அறிமுகப்படுத்தப்பட்டு பிரபலமானதாகும். இதன் முன்புற விளக்குகள் மிகவும் அழகாக லேசர்-கட் வடிவமைப்புடன் நட்சத்திர விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. இதேபோல் இதன் உட்புறத்தில் வானத்தில் மின்னணும் நட்சத்திரங்களை போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. இரவு நேரத்தில் இந்த காரின் உட்புறம் மிகவும் அழகாக ஜொலிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. பக்கவாட்டைப் பொறுத்தவரை, இதன் முன்புறத்தில் ரோல்ஸ்-ராய்ஸ் கார்களுக்கென்றே தனித்துவமான குறுகிய முன்புற சக்கரமும், நீண்ட வீல்பேஸ் மற்றும் பரந்த சி-பில்லர் ஆகியவற்றை கொண்டுள்ளது. இதன் முன்புறத்தில் 'ஸ்பிரிட் ஆஃப் எக்ஸ்டஸி' சின்னம் கண்கவரும் வகையில் மிகவும் அழகாக உள்ளது. மேலும் 'ஸ்பிளிட்-பெல்ட்' கோடு முன்புறத்தில் தொடங்கி, பின்பக்க கதவை நோக்கி மெதுவாக வளைந்து பின்புற விளக்குகள் வரை செல்கிறது. இதன் பக்கவாட்டில் உள்ள ஒளிரும் கோடுகள் இதற்கென தனித்துவமான வகையில் மிகவும் அழகாக உருவாக்கப்பட்டது. இதன் காரணமாக இந்த காரில் பயணிக்கும்போது 'மந்திர கம்பளத்தில் பறப்பது' போன்ற ஒரு உணர்வை ஏற்படுத்தும்.

இதன் பக்கவாட்டைப் பொறுத்தவரை புதுவிதமான சக்கரங்களுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது. முக்கோண வடிவத்துடன் கூடிய 3டி, துருப்பிடிக்காத உலோகத்திலான சக்கரம் முழுமையான அல்லது பகுதி அளவிலான அலுமினிய பூச்சுடன் கிடைக்கிறது. இது 1920களின் ரோல்ஸ் ராய்ஸ் கார்களின் மாடலை நினைவுபடுத்தும் வகையில், இந்த பாண்டம் கார் மிகவும் அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த சக்கரம் பளபளப்பான துருப்பிடிக்காத உலோகம் மற்றும் கருப்பு மற்றும் அரக்கு நிறம் கலந்து தயாரிக்கப்படுகிறது, இது நிலத்தில் பறப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தும்.



The Drive, Westhampnett, Chichester, PO18 0SH, UK +44 (0)1243 384000 enquiries@rolls-roycemotorcars.com www.rolls-roycemotorcars.com

Rolls-Royce Motor Cars Limited. Registered in England and Wales. Company number 3522604. Registered address: Summit ONE, Summit Avenue, Farnborough, Hampshire, GU14 0FB.
Rolls-Royce Motor Cars Ltd is authorised and regulated by the Financial Conduct Authority in relation to its credit broking activities in the UK

சில பாண்டம் வாடிக்கையாளர்களின் கோரிக்கையின்படி, இதன் முன்புற என்ஜினின் கீழ் புறத்தில் அடர்த்தியான நிறத்தில் குரோமியம் தகடால் தயாரிக்கப்பட்ட கிரில், கருப்பு நிற பானட் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இந்த அழகிய வடிவமைப்பானது இப்போது பாண்டம் காரை ஒளிபடும்போது ஒளிரும் வகையிலும் அல்லது இருட்டில் இருண்ட தோற்றத்திலும் காட்சிப்படுத்துகிறது.

பாண்டம் காரின் ஆடம்பரமான உட்புறம் எந்தவித மாற்றமும் இல்லாமல் உள்ளது: ஸ்டியரிங் வீல் சற்று தடிமனாக உருவாக்கப்பட்டுள்ளது, இது ஓட்டுனருக்கு மிகவும் இணைக்கப்பட்ட மற்றும் உடனடி தொடர்பு புள்ளியை வழங்குகிறது. பாண்டம் மற்றும் பாண்டம் எக்ஸ்டெண்ட் ஆகிய இரண்டு கார்களும் வெவ்வேறு விதமான இருக்கைகளைக் கொண்டுள்ளன. டிரைவிங் சீட்டில் அமர்ந்து தாங்களே காரை ஓட்ட வேண்டும் என்ற எண்ணம் ஏராளமான வாடிக்கையாளர்களுக்கு அதிகரித்து வருவதால் இந்த பாண்டம் கார் இப்போது பிரதானமாக அனைவராலும் விரும்பப்படுகிறது. பின் இருக்கையில் இருந்து கொண்டு எப்படிச் செல்ல வேண்டும் என்று கட்டளையிட விரும்புவோருக்கு, பாண்டம் எக்ஸ்டெண்டட் சிறந்த ஒரு அனுபவத்தை வழங்குகிறது.

**ரோல்ஸ்-ராய்ஸ் கனெக்டட்**

தற்போது, பாண்டம் கார் 'ரோல்ஸ்-ராய்ஸ் கனெக்டட்' உடன் வருகிறது. இது இதன் விஸ்பர் செயலியிலிருந்து காருக்கு நேரடியாக ஒரு முகவரியை அனுப்ப உரிமையாளருக்கு உதவுகிறது, விஸ்பர் என்பது ரோல்ஸ்-ராய்ஸ் நிறுவனத்தின் பிரத்யேக உறுப்பினர் செயலி ஆகும். இது உங்களுக்கு நீங்கள் செல்ல வேண்டிய இடங்களுக்கு அதாவது ஓட்டல்கள் உள்ளிட்ட இடங்களுக்கும் டீலர்ஷிப் பற்றிய விவரங்களுக்கும் உங்களுக்கு வழிகாட்டுகிறது. மேலும் இந்த செயலி காரின் இருப்பிடம், பாதுகாப்பு நிலை மற்றும் தற்போதைய 'நிலை' ஆகியவற்றையும் காட்டுகிறது; இதில் ஒரு பட்டனைத் தட்டி, கார் பற்றிய ஏதேனும் சேவைத் தேவைகள் அல்லது

தகவல்களுக்கு விருப்பமான டீலரை உரிமையாளர் தொடர்பு கொள்ளும் வசதி உள்ளது.

**ஆடம்பரத்தின் துருவங்கள்**

ரோல்ஸ்-ராய்ஸ் நிறுவனத்தின் தனித்துவமிக்க தயாரிப்பான இந்த பாண்டம் கார் மேல்தட்டு வாடிக்கையாளர்களை வெகுவாக ஈர்க்கிறது. இந்த கார் பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்ற காராக உள்ளது. ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனத்தால் இதுவரை பிரத்யேகமாக பல கார்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் பாண்டம் வாடிக்கையாளர்களை ஈர்ப்பது என்பது தற்செயலான நிகழ்வு அல்ல. அதற்கு காரணம் அதன் வடிவமைப்பாகும். இதில் உள்ள ஒவ்வொரு பகுதியும் பார்த்து பார்த்து செதுக்கப்பட்டுள்ளது. இது ஒரு பரந்த உண்மையை விளக்குகிறது. பாண்டம் கார் அறிமுகம் செய்யப்பட்ட நாளில் இருந்து வாடிக்கையாளர்களின் விருப்பத்தை பூர்த்தி செய்யும் விதமாகவே இருந்து வருகிறது. இது 'உலகின் சிறந்த கார்' மட்டுமல்ல, அவர்களுக்கும் அவர்களின் உலகத்திற்கும் இது சிறந்த கார் ஆகும். வெளிப்படையாக சொல்ல வேண்டுமானால், இந்த காருக்கு என்று ‘வழக்கமான’ வாடிக்கையாளர் என்று யாரும் இல்லை. இதில் உள்ள ஆடம்பரம், இளைஞர்கள் மற்றும் முதியவர்கள் என அனைத்து வாடிக்கையாளர்களையும் கவரும் விதமாக உள்ளது. நவீனமாக இருந்தாலும் சரி அல்லது பாரம்பரியமாக இருந்தாலும் சரி அவர்களின் விருப்பத்தை இந்த கார் பூர்த்தி செய்கிறது. ஒருபுறம் இந்த கார் இளமை, ஆற்றல் மற்றும் கம்பீரமானதாகவும் விளங்குகிறது. மறுபுறம் ஆடம்பரம் மற்றும் காலவரையின்றி எந்த காலத்திற்கும் ஏற்ற காராகவும் திகழ்கிறது.

ரோல்ஸ்-ராய்ஸ் நிறுவனத்தின் பிரத்யேக தயாரிப்புகள் வாடிக்கையாளர்களின் பண்புகள் மற்றும் குணாதிசயங்களை பிரதிபலிக்கின்றன. எட்டாவது தலைமுறை பாண்டம் கார் வாடிக்கையாளர்களின் விருப்பம் மற்றும் அவர்களின் தனிப்பட்ட பாணி மற்றும் தன்மையின் உண்மையான பிரதிபலிப்பாகும்.

ROLLS-ROYCE
MOTOR CARS

The Drive, Westhampnett, Chichester, PO18 0SH, UK +44 (0)1243 384000 enquiries@rolls-roycemotorcars.com www.rolls-roycemotorcars.com

Rolls-Royce Motor Cars Limited. Registered in England and Wales. Company number 3522604. Registered address: Summit ONE, Summit Avenue, Farnborough, Hampshire, GU14 0FB.
Rolls-Royce Motor Cars Ltd is authorised and regulated by the Financial Conduct Authority in relation to its credit broking activities in the UK

பாண்டம் காரின் பலம் என்னவென்றால், வாடிக்கையாளர்கள் இந்த 'ஆடம்பர துருவங்களுக்கு' இடையே எங்கும் தங்களை நிலைநிறுத்திக் கொள்ள அனுமதிக்கிறது, அத்துடன் அவர்களின் சொந்த விருப்பத்திற்கு ஏற்ப ஆடம்பரத்தை வழங்குகிறது. தொழில்நுட்ப ரீதியாக, பொருள் ரீதியாக, அழகியல் ரீதியாக மற்றும் ஆற்றல் ரீதியாக - இன்னும் 'உலகின் சிறந்த கார்' பாண்டம் தான் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு இந்த கார் ஏற்படுத்தி உள்ளது.

**மிகவும் அழகிய வடிவமைப்பில் பாண்டம் பிளாட்டினோ**

பாண்டம் சீரிஸ் II-ன் அறிமுகத்தைக் குறிக்கும் வகையிலும் ரோல்ஸ்-ராய்ஸ் நிறுவனத்தின் தனித் திறனை விளக்கும் வகையிலும், பிரத்யேகமான தலைசிறந்த ஒரு படைப்பான பாண்டம் பிளாட்டினோ என்னும் காரை இந்த நிறுவனம் உருவாக்கியுள்ளது. விலைமதிப்பில்லாத உலோகம் மற்றும் பிளாட்டினம் பூச்சில் வெள்ளை நிறத்தை இந்த கார் கொண்டுள்ளது.

பாண்டம் பிளாட்டினோ காரின் உட்புறங்கள் துணிகளைக் கொண்டு மிகவும் அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இது 2015-ம் ஆண்டில் செரினிட்டி கார் அறிமுகத்துடன் தொடங்கியது. இது கையால் வரையப்பட்ட, கையால் எம்ப்ராய்டரி செய்யப்பட்ட உட்புறத்துடன் கூடிய உண்மையான பிரத்யேக பாண்டம் கார் ஆகும். பாண்டம் பிளாட்டினோ கார் தோல் இல்லாமல் பிற பொருட்களை கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் உட்புறங்கள் வழக்கமான முறையில் இல்லாமல் மிகவும் புதிய முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த காரின் முன் இருக்கைகள் சிறந்த ரோல்ஸ் ராய்ஸ் லெதரில் தயாரிக்கப்பட்டுள்ளன. அதே சமயம் பின்புறத்தில் உள்ள இருக்கைகள் துணியால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.


The Drive, Westhampnett, Chichester, PO18 0SH, UK +44 (0)1243 384000 enquiries@rolls-roycemotorcars.com www.rolls-roycemotorcars.com
Rolls-Royce Motor Cars Limited. Registered in England and Wales. Company number 3522604. Registered address: Summit ONE, Summit Avenue, Farnborough, Hampshire, GU14 0FB.
Rolls-Royce Motor Cars Ltd is authorised and regulated by the Financial Conduct Authority in relation to its credit broking activities in the UK

இதன் உட்புறம் அழகிய 'டோன்-ஆன்-டோன்' இரண்டு மாறுபட்ட துணிகளை கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இதில் ஒன்று ஆடம்பரத்திற்கான இத்தாலி தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டதாகும். மற்றொன்று பளபளப்பான பூச்சுக்காக மூங்கில் இழைகளிலிருந்து தயாரிக்கப்பட்டதாகும்.

இரண்டும் 'ஸ்பிரிட் ஆப் எக்ஸ்டஸி'யின் சுருக்கமான விளக்கத்தின் அடிப்படையில் அசல் மீண்டும் வரும் வடிவத்தைப் பகிர்ந்து கொள்கின்றன. இதன் உட்புறம் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும் வகையில் பட்டு துணியால் நெய்யப்பட்டு பார்க்க அழகாக இருக்கும் வகையில் பூச்சு ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. இது பாண்டம் கேலரி மற்றும் இருக்கையில் அமர்ந்து பார்ப்பவர்களின் பார்வைக்கு வலதுபுறத்திலும், கைகளை ஓய்வாக வைத்திருக்கும் இடம் மற்றும் சென்டர் கன்சோல் போன்ற முக்கிய தொடு புள்ளிகளிலும் உள்ளது. மூங்கில் துணி பெரிய ஐகான்களுடன் எம்ப்ராய்டரி செய்யப்பட்டுள்ளது, இது உட்புற வடிவமைப்பில் பொதுவாகக் காணப்படும் மேலெழும்பிய தோற்றத்தை அளிக்கிறது. மிகவும் நெகிழ்வான இந்த துணி உட்புறத்தின் கீழ் பகுதிகளில் வைக்கப்படுகிறது, அங்கு அவை பெரும்பாலான தொடர்புகளைத் தாங்க வேண்டும் என்பதற்காக இவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதே வடிவமைப்பு பாண்டமின் டாஷ்போர்டு கடிகாரத்திலும் உள்ளது. இதன் சுற்றுப்புறம் ஒரு 3டி அச்சிடப்பட்ட மட்பாண்டத்தால் ஆனதாகும். இது ஒரு பாரம்பரிய பொருளின் உண்மையான சமகால செயலாக்கமாகும். இதன் உட்புற வண்ணங்கள் பாண்டம் காரை ஒரு அழகான மற்றும் மீறமுடியாத செழுமைக்கு அழைத்துச் செல்கின்றன.

இதில் உள்ள மிகப்பெரிய சிறப்பு அம்சம் என்பது இந்த காரின் மேற்புற கூரையில் உள்ள நட்சத்திர கூட்டம் போன்ற வடிவமைப்பாகும். குறிப்பாக ரோல்ஸ் ராய்ஸ் பிளாட்டினோவுக்காக இந்த நட்சத்திரங்கள் பிரத்யேமாகவும் வினோதமாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.



The Drive, Westhampnett, Chichester, PO18 0SH, UK +44 (0)1243 384000 enquiries@rolls-roycemotorcars.com www.rolls-roycemotorcars.com

Rolls-Royce Motor Cars Limited. Registered in England and Wales. Company number 3522604. Registered address: Summit ONE, Summit Avenue, Farnborough, Hampshire, GU14 0FB.
Rolls-Royce Motor Cars Ltd is authorised and regulated by the Financial Conduct Authority in relation to its credit broking activities in the UK

டார்ஸ்டன் முல்லர்-ஓட்வோஸ் கூறுகையில், எங்கள் வாடிக்கையாளர்கள் பாண்டம் கார் மீது வைத்திருக்கும் அன்பை நாங்கள் நன்கு அறிந்திருக்கிறோம். அந்த காரை மேம்படுத்த முடியாது என்று அவர்கள் உணர்ந்தனர்; அவர்களின் அந்தக் கண்ணோட்டத்தை மதிக்கும் அதே வேளையில், முழுமையான பரிபூரண நிலையை நோக்கி மெதுவாக முன்னேறுவது எப்போதும் சாத்தியம் ஆகும் என்றும் உண்மையில் அது அவசியம் என்று நாங்கள் நம்புகிறோம்.

"புதிய பாண்டம் சீரிஸ் II காருக்காக நாங்கள் செய்த நுட்பமான மாற்றங்கள் அனைத்தும் நுணுக்கமாக பரிசீலிக்கப்பட்டு, மிகக் கவனமாக செயல்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.